# கொழும்புப் பத்திரிகையாளர்கள் யாழ். வர

★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice
Sri Lanka under No: QB/8945/78

மலர்: 20 தை 28 ரபி-அவ் 12 இதழ் 360
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 10-2-79

## அரச அதிபர் அழைப்பு

### உண்மைநிலையை அறியவும் கலாசார பரிவர்த்தனைக்கும் ஏற்பாடு

[யாழ்ப்பாணம்[

கொழும்பிலுள்ள தேசியப் பத்திரிகைகளினதும் அரசியல் கட்சிப்பத்திரிகைகளினதும் சில பிரதிநிதிகளை யாழ்ப்பாணம் வந்து சிலதினங்கள் தங்கியிருந்து யாழ்ப்பாண மக்களின் பண்பாடு, குறைநிறைகளை அறிந்து சென்று தேசிய ஐக்கியத்தை உருவாக்குவதற்கான அத்திபாரத்தைப் பலப் படுத்துவதற்கான பணியில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்ணண்டோ ஈடுபட்டுள்ளார்.

யாழ். ரோட்டரிக் கழகத்தினதும் மற்றும் பொது மக்களினதும் ஆதரவுடனும் யாழ் மாவட்டக் கலாச்சாரப் பேரவையின் தலைவரான அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்ணண்டோ சகல பத்திரிகை நிறுவனங்களுக்கும் அனுப்பியுள்ள அழைப்பிதழ்களில் உண்மையை உண்மையாக அறிந்து தெரிந்து தெளிந்து எழுதக் கூடிய பிரதிநிதிகளை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்குமாறும் அவர்கள் வந்து போகும் செலவுகளைக் கலாசாராப்பேரவை ஏற்றுக் கொள்ளுமென்றும் தெரிவித்துள்ளார்.

கொழும்பு பத்திரிகைகளிலிருந்துவரும் பிரதிநிதிகள் தங்குவதற்கான ஏற்பாடுகளும் சரி செய்யப்பட்டிருப்பதாகவும் அரச அதிபர் தெரிவித்திருக்கிறார்.

# யாழ். கல்லூரிகளில் மீண்டும் சீரான நிலை திரும்புகிறது!

## அடுத்தவாரம் சகஜநிலை என்கிறார் கோப்பாய் எம். பி.

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணமாவட்டத்திலுள்ள பல பாடசாலைகளிலும். கல்லூரிகளிலும் மாணவ மாணவியர் பெரும்பாலும் அனுமதிக்கப்பட்டதாகவும் சில பாடசாலைகளில் வரவு பதிவு செய்யப்படாமல் தனிப்பட்ட கடதாசியிலும் கொப்பிகளிலும் பதியப்பட்ட போதிலும் பாடபோதனைகள் நடைபெற்றதாகவும் இப்போதுள்ள நிலைமையில் அடுத்த வாரமளவில் நிலைமை சீராகி சகல பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் பாடபோதனை வழமை போல்நடைபெறலாமென்றும் கோப்பாய்ப் பிரதிநிதியும் தமிழர் விடுதலைக்கூட்டணி பிரமுகருமான திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை தெரிவித்தார்.

## நிலைமையை சென்று பார்த்தனர்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைப் பகிஷ்கரிப்பைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள நிலைமைகளை அறிந்து கொள்ளும் பொருட்டு தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் திரு. சந்ததியாரும் பொதுச் செயலாளர் திரு. யோகநாதனும் பல இடங்களுக்கும் சென்று பார்வையிட்டனர்.

## கூட்டணியின் ஜி.ஜி. நினைவு கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர்களில் ஒருவரான அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின், 2வது நினைவு தினக் கருத்தரங்கொன்று. நாளை மாலை தமிழர் விடுதலைக் கூட்கூட்டணிப் பணிமனையில் நடைபெறவுள்ளது

கருத்தரங்கிற்கு யாழ்ப்பாண எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் தலைமை வகிப்பார்.

அமரர் ஜி.ஜி. பொன்னம்பலம் காட்டிய பாதையில்

(6ம்-ம் பக்கம் பார்க்க)

### மாணவர்களை அனுமதித்த

## கல்லூரி அதிபர்கள்மீது நடவடிக்கை?

(யாழ்ப்பாணம்)

கல்வி அமைச்சரின் கட்டளையை மீறி மாணவர்களைப் பாடசாலைகளில் கடந்த இரு தினங்களும் அனுமதித்த அதிபர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக கல்வி இலாகா வட்டாரங்கள் தெரிவித்தன.

மாணவர்களை, பகுதி வைத்திய அதிகாரியின் வைத்திய அத்தாட்சிப்பத்திரமன்றி பாடசாலை வகுப்புகளில் அனுமதித்ததற்கான காரணத்தை தெரிவிக்குமாறு அதிபர்களிடம் விளக்கம் கோரப்படவிருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

வைத்திய அதிகாரியின் பெறுமதியுள்ள வைத்திய அத்தாட்சிப்பத்திரமின்றி, பாடசாலை பகிஷ்கரிப்பு செய்த மாணவர்களை அனுமதிக்கக் கூடாதென. கல்வி அமைச்சர் கட்டளையிட்டிருந்தார்.

இந்த கட்டளையை ஆட்சேபித்து இதனை அமுல் நடத்த முடியாமலிருப்பதாக, வடமாகாண கல்லூரி அதிபர்கள் சங்கத்தினர், கல்வி அமைச்சருக்கு அறிவித்திருந்தனர்.

இலங்கை ஆசிரியர் சங்கம், தமிழர் ஆசிரியர் சங்கம் ஆகியவையும், இந்தக் கட்டளையை வாபஸ் பெறுமாறு கோரியிருந்தனர்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கமும் இதனை வாபஸ் பெறுமாறு, ஜனாதிபதியிடம் கேட்டிருந்தார்.

கல்வி அமைச்சரிடமிருந்து இதுதொடர்பாக நேற்றுவரை எவ்வித புதிய உத்தரவுகளும், வடமாநில கல்வி அதிபருக்கு கிடைக்கவில்லை எனத் தெரிய வருகிறது. (க)

### பகிஷ்கரிப்பு செய்த மாணவர்கள்

## வைத்திய அத்தாட்சி எவரும் சமர்ப்பிக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

பாடசாலை பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட மாணவர்களில் ஒருவராவது இதுவரை வைத்திய அத்தாட்சிப்பத்திரம் சமர்ப்பிக்கவில்லையென கல்விப்பகுதி வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

வடபகுதியில் சில பாடசாலைகளில், மாணவர்கள் தடை செய்யப்பட்ட போதிலும், மாணவர்கள் தங்கள் வகுப்புகளில் சென்று அமர்ந்துகொண்டனர். சில பாடசாலைகளில் அனுமதிக்கப்படாத மாணவர்கள் வீடுகளுக்குத்திரும்பிச்சென்றனர். வேறு சில பாடசாலைகளில் அனுமதிக்கப்படாத மாணவர்கள் பாடசாலைக்கு வெளியில் வந்து நின்றனர்.

கிளிநொச்சி சென். திரேசா மகளிர் கல்லூரியில் மாணவர் அனுமதிக்கப்படாததினால், அவர்கள் பாடசாலைக்கு வெளியில் வந்து நின்றதாகவும், வைத்திய அத்தாட்சிப்பத்திரமின்றி மாணவர் வகுப்புகளில் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் அதிபர் செல்வி ராதா சோமசுந்தரம், மாணவர்களிடம் அறிவித்ததாக, பரந்தன் நிருபர் அறிவிக்கின்றார்.

கிளிநொச்சி இந்து மகாவித்தியாலயத்திலும் மாணவர் வைத்திய அத்தாட்சிப்பத்திரம் கொண்டு வராததால், மாணவர்கள் அனுமதிக்கப்படவில்லை. மாணவர்கள் யாவரும் வீடுகளுக்கு திரும்பிச் சென்றனர்.

வரணி மகாவித்தியாலயத்தில் மாணவர்கள் சென்று வகுப்புகளில் அமர்ந்துகொண்டனர். இதேபோன்றுதான் கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம், கொடிகாமம்

[6ம் பக்கம் பார்க்க]

## போக்குவரத்து மந்திரியின் வடபகுதி விஜயம்

(கொக்குவில்)

போக்குவரத்து அமைச்சர் ஜனாப் எம் எச் மூகமது நாளை காலை 11-50 மணிக்கு ஹெலிகொப்டரில் யாழ். முற்றவெளியில் வந்திறங்குவார். இவருடன் சட்டத்தரணி ஆர். ஆர். நல்லையாவும் வருவார்.

நாளை பிற்பகல் 4 மணிக்கு யாழ் துரையப்பா விளையாட்டரங்கில வெற்றியீட்டிய வீரர்களுக்கு அமைச்சர் பரிசில்களை வழங்குவார்.

மாலை 5-30 மணிக்கு குருநகர் மக்கள் சார்பில் நிறுவப்பட்டுள்ள அமரர் ஜி ஜி, பொன்னம்பலத்தின் உருவச் சிலையைத் திரைநீக்கம்செய்து வைப்பார்.

இம்மாதம் 12ந் தேதி திங்கட்கிழமை காலை 9-30 மணிக்கு யாழ்ப்பாணம் அரசாங்கச் செயலகத்தில் நடைபெறும் மாநாட்டில் அமைச்சர் கலந்துகொள்வார்.

பிற்பகல் 2-00 மணிக்கு யாழ் பஸ் நிலையத்திற்கு அமைச்சர் நேரில் விஜயஞ் செய்து பார்வையிடுவார்.

]6-ம் பக்கம் பார்க்க]

## ஒரேயொரு தமிழர் தெரிவு

[யாழ்ப்பாணம்]

உள்ளூராட்சி நிர்வாகசேவையில் 12 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களில் ஒரேயொரு தமிழர் வட்டுமே தெரிவாகியுள்ளார்.

ரயில்வேத் திணைக்களத்தில் கடமையாற்றிக்கொண்டிருந்த பட்டதாரியான திரு பொ பாலசிங்கம் எனபவரே இவராவர். அனலைதீவைச் சேர்ந்த திரு. பாலசிங்கம் தற்போது சுன்னாகம் பட்டணசபையின் நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

## வீமன்காமத்தில் பெப். 13-ல் 5 வீடுகள் அன்பளிப்பு

[பலாலி]

தேசிய வீடமைப்புத் திணைக்களத்தின் இலவச வீடமைப்புத்திட்டத்தின்கீழ் காங்கேசன்துறைத் தொகுதியில் தெல்லிப்பழை வீமன்காமத்தில் அமைக்கப்பட்ட 5 வீடுகளும், இம்மாதம் 13ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை கையளிக்கப்படவிருக்கிறது.

காங்கேசன்துறைத் தொகுதி எம் பி.யும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் தேசிய வீடமைப்புத்திணைக்கள யாழ். உதவி ஆணையாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோர் இந்த 5 வீடுகளையும், 5 குடும்பங்களுக்கு வழங்குவர்.

## வரி விளம்பரம்

### தேவை

அனுபவம்வாய்ந்த கொம்பஸிட்டர், சிலிண்டர் மெஸின் மைண்டர் தேவை. விண்ணப்பிக்கவும்: ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகம், நாவலப்பிட்டி
1552

நாவற்குழி பகுதியில் உடனடியாக காணி தேவை. பரப்பு அளவையும், விலையையும் அறிவித்து தொடர்பு கொள்ளவும். ஜிம்மி ராசரத்தினம், 24, கண்டிவீதி, யாழ்ப்பாணம். (தொலைபேசி: 7367)
1589

ஆலயத்தில் தொடர்பாக கந்தபுராணம் வாசிப்பதற்கு தேர்ச்சிபெற்ற ஒருவர் உடனே தேவை. தொடர்பு: பரிபாலன சபைத் தலைவர், ஆயாக்கடவைச் சித்தி விநாயகர் ஆலயம், புன்னாலைக்கட்டுவன்.
1588

### விற்பனைக்கு

நல்ல நிலைமையிலுள்ள 2 ஸ்ரீ 6946 இலக்கமுடைய 'ஒபயல் றெக் காட்' கார் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: ஜிம்மி ராசரத்தினம், 24, கண்டி வீதி. யாழ்ப்பாணம். (தொலைபேசி: 7367)
1590

### பயிற்சி

வெல்டிங் (Electric Arc & Gas) இலெக்றிக் வயறிங், ரேடியோ (Transistor), Auto Electricians Certificate, Diploma in Building Technology முதலிய பயிற்சிகள், வெளிநாட்டு முறையில் நடாத்தப்படும். ஆங்கிலமும் முதலுதவிப் பயிற்சியும் இலவசம். National Institutes, 57, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம்
1501

### வகுப்புகள்

யாழ் நகரில் சிறந்த தொழில்நுட்ப நிறுவனம் 12-2-1979ல் ஆரம்பிக்கப்படவிருக்கும் புதிய வகுப்புகளுக்கு எவரும் விண்ணப்பிக்கலாம். Refrigeration & Air Conditioning = 4 மாதம், கட்டிட மேற்பார்வையாளர் பயிற்சி = 2 மாதம். I. A. R. 615, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
1570

### விற்பனைக்கு

திருநெல்வேலி சந்தியிலிருந்து 300 யார் தொலைவில் ஆடியபாதம் வீதி முகப்புடன் கிணறும் சிறு வீடும் கொண்ட நாலரைப் பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஸ்ரீவாணி பேப்பர் ஸ்ரோர்ஸ், திருநெல்வேலிசந்தி, திருநெல்வேலி.
1592

யாழ்ப்பாணக் கல்லூரி வளாகத்தில் ஒரு வேப்பமரம் விற்பனைக்குண்டு. விரும்புவோர் மரத்தைப் பார்வையிட்டு அதன் விலைமதிப்பை அதிபர், யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை என்ற விலாசத்திற்குப் பதிவுத் தபால் மூலம் 28-2-79 புதன் கிழமைக்கு முன்னர் விண்ணப்பிக்கவும், காகித உறையின் வலது பக்கத்தில் "விற்பனைக்கு வேப்பமரம்" என்று குறிப்பிடவும். அதிபர், யாழ்ப்பாணக்கல்லூரி, வட்டுக்கோட்டை.
1584

நைலோன் மடி வலைகளும் அதற்கு தேவையான பொருட்களும் எங்களிடம் விற்பனைக்கு உண்டு 6, மவுண்ட் கார்மேல் வீதி, யாழ்ப்பாணம்
1583

8 ஸ்ரீ 3000 தொடரிலக்க போட்கோட்டீனு எல் [FORD CORTINA L] [1972, 1973 மொடல்கள்] இரண்டு கார்களும் EY 8000 தொடரிலக்க சோமசெற் காரும் நல்லநிலையில்விற்பனைக்குண்டு. கூடிய விலைகள் கோரப்படுகின்றன. விபரங்களுக்கு 32/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7804
1574

### தேவை

யாழ்ப்பாணக் கல்லூரி கனிஷ்ட பாடசாலையின் பிரதம வகுப்புகளுக்கு ஆசிரியர் தேவை. பயிற்றப்பட்ட ஆசிரியை. ஒரு நடன ஆசிரியர் (வாத்திய இசைத் தேர்ச்சி விரும்பப்படத் தக்கது) கல்லூரி அலுவலகத்திற் பெறப்படும் பத்திரத்தில் 28-2-79 முன்பாக விண்ணப்பம் செய்க. அதிபர் யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை.
1585

## வீதிகள் சீர்கேடு

(புலோலி)

பருத்தித்துறை நகரசபைக்கு உட்பட்ட வீதிகள் மிகவும் சீர்கேடான முறையில் தண்டும் குழியுமாக இருப்பதனால், போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது

## விற்பனைக்கு-இயந்திரப்படகுகள்

தற்போது மன்னாரில் பாவிக்கப்படும் ஒரு வருடத்திற்கு உள்ளாகப் பாவிப்பிலுள்ள 28' மீன்பிடி இயந்திரப் படகுகள் விற்பனைக்கு உள்ளன. வலை மற்றும் உபகரணங்களும் விற்பனைக்கு உண்டு.

VADANITHY LTD,
107, W. A. Silva Mawatha, Colombo-6.
1576

## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் நல்லையா

ஊரெழு கிழக்கைச் சேர்ந்த மலாயன் பென்ஷனர் வல்லிபுரம் நல்லையா அவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 1-30 மணிக்கு இறைவனடி எய்தினார். இவர்காலஞ்சென்ற சின்னம்மாவின் அன்புக் கணவரும், அமிர்தலிங்கம் [மஸ்கன்ஸ்], தனபாலன் [லண்டன்], தவநேசன் (மகாவலி அபிவிருத்திச் சபை], குமாரலிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் புதன்கிழமை ஊரெழுவில் நடைபெற்றது உற்றாரும், உறவினரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

அன்னாரின் மரணச் சடங்குகளில் நேரில் கலந்து கொண்டும், இறுதியாத்திரையின் போது பலவழிகளிலும் உதவிபுரிந்த அனைவருக்கும் எமது மனம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

குடும்பத்தார்.

"சிவசக்தி"
ஊரெழு.
1581

## வெளிநாடுகளுக்கு யாழ்மாம பழங்கள் ஏற்றுமதி

[நெல்லியடி]

யாழ்ப்பாணத்து மாம்பழங்கள் குவைத், டுபாய் போன்ற அரபு நாடுகளுக்கு கடந்த வாரம் விமான மார்க்கமாக அனுப்பி வைக்கப்பட்டன.

பல்லாயிரம் ரூபா பெறுமதியான இம்மாம்பழங்களை அச்சுவேலியிலுள்ள முருகன் இண்டஸ்றீஸ் என்ற நிறுவனமே அனுப்பி வைத்துள்ளது-

யாழ்ப்பாணத்திலிருந்து பெட்டிகளில் அடைக்கப்பட்டு தனியார லொறி வண்டிகள் மூலம் இம் மாம்பழங்கள் கட்டுநாயக்கா விமானத் தளத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன. [உ]

## வீமன்காமத்தில

[யாழ்ப்பாணம்]

வீமன்காமத்தில் 'பற்றி'க் அச்சிடும் நிலையம் ஒன்று விரைவில் நிறுவப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை வீமன்காமம் கிராம அபிவிருத்திச் சங்கம் மேற்கொண்டுள்ளது. [புலோலி-நி)

## வலி. மேற்கில்

[சங்கானை]

வலி மேற்கில் பல பாடசாலைகளில் நேற்று பாடசாலைகளுக்குச் சென்ற மாணவர்கள் அதிபர்களினால் திருப்பி அனுப்பப்பட்டனர்.

தரப்படுத்தல் காரணமாக பாடசாலை பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு கடந்த 7ம் திகதிவரை பாடசாலைக்கு வருகை தராது வைத்திய அத்தாட்சி பத்திரம் கொண்டு செல்லாத மாணவர்களே அதிபர்களினால் திருப்பி அனுப்பிவைக்கப்பட்டனர். [க]

## ஏழாலைக் கிராமாட்சி மன்றம் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

1979-ம் ஆண்டுக்கு ஏழாலைக் கிராமாட்சி மன்ற எல்லைக்குள் கட்டிட வேலைகள், வீதிகள் அமைத்தல், திருத்தல் வேலைகள், கான் அமைத்தல், திருத்தல் வேலைகள் முதலிய வேலைகட்காக ரூபா 5,000/-க்கும், ரூபா 20,000/-க்கும் இடையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களை இக்காரியாலயத்தில் 20-02-79-ந் திகதிக்கு முன்பதாகப் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மேற்படி பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கட்கு மட்டுமே கேள்வி விளம்பரம் அனுப்பி வைக்கப்படும்.

ஒப்பம்
மா. இராசரட்னம்,
விசேட ஆணையாளர்.
ஏழாலை கிராமாட்சி மன்றம்,
09-02-79
1582

# பூட்டோவுக்கு

## மன்னிப்பு வழங்குக! தமிழர் கூட்டணி கோரிக்கை

[கொழும்பு]

மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் ஜனாப் சுல்பிகார் அலிபூட்டோவுக்கும் மற்றும் மூவருக்கும் மன்னிப்பு வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் பாகிஸ்தான் இராணுவத் தலைமை அதிகாரி ஜெனரல் ஸியாவுல் ஹக்குக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜெனரல் ஹக்குக்கு விடுத்துள்ள வேண்டுகோளில் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளதாவது:-

ஜனாப பூட்டோவுக்கும் மற்றும் மூவருக்கும் விதிக்கப்பட்டுள்ள மரணதண்டனையை தங்களின் உயர்ந்த அதிகாரத்தைப்பயன்படுத்தி ரத்துச் செய்து அவர்களுக்கு மன்னிப்பு வழங்க வேண்டும் என்று இலங்கைத் தமிழர் விடுதலைக்கூட்டணி கேட்டுக்கொள்கிறது.

அவ்வாறு மன்னிப்பு அளிக்கும் செயல் தங்களதும் தங்கள் நாட்டினதும் கீர்த்தியை உலக அரங்கில் உயர்த்தும். (ம-இ)

# பயிற்சிமுகாம்

## அறவழிவாழ்வு - அறப்போர்

தந்தை செல்வா வழியில் அறவழிவாழ்வு, சமூக அநீதிகட்கு எதிரான போராட்டம் என்பன தொடர்பான முதனிலைப் பயிற்சி 1979 பெப். 23, 24, 25 ஆகிய மூன்று நாட்களிலும் நடைபெறத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பயிற்சியில் கலந்துகொள்ள விரும்புகின்ற 20–30 வயதெல்லைக்குட்பட்ட இளைஞர்கள், 1979 பெப். 16க்கு முன் எமக்கு எழுதுக.

தந்தை செல்வா நினைவு அறங்காவல்குழு
20, சோமசுந்தரம் அவனியு, யாழ்ப்பாணம்.
9-2-79

## தசாக கிருகயக்ஞ அழைப்பு

### நயினை சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள்

2-2-79 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்த எமது தந்தை பிரதிஷ்டா பூஷணம் சிவாகம ஞானபானு இந்துமத பீடாதிபதி நயினை சிவஸ்ரீ ஐ.கைலாசநாதக் குருக்களின் ஆத்மசாந்தி கிரியைகளை உள்ளடக்கிய தசாக முதலான ஏகோதிஷ்டம், சபிண்டீகரணம், கிருகயக்ஞம் வரையிலான கிரியைகள் நடைபெறவுள்ளன. உற்றார், உறவினர், நண்பர்கள், அடியார்கள், அனுதாபிகள் பின்வரும் திகதிகளில் வந்து பங்குபற்றுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

கிரியைகள்:

11-02-79 ஞாயிறு: தசாகம்
12-02-79 திங்கள்: ஏகோதிஷ்டம்
13-02-79 செவ்வாய்: சபிண்டீகரணம்
14-02-79 புதன்: கிருகயக்ஞம்

இங்ஙனம்
திருமதி ஐ. கைலாசநாதக்குருக்களும்,
குடும்பத்தினரும்.
1578

புதிய தொலைபேசி: 7804

# நியூ விக்ரேஸ் றெக்கோடிங் (B) பார்

23, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

ஆங்கில பாடப் பிரியர்களுக்கு ஒலிப்பதிவு செய்துகொள்ள

இதோ உங்கள் அபிமானப் பாடல்கள்

**Boney M**
★ Night Flight to Venus
★ Love For Sale
★ Take the Heat off me

**Bee Gees**
★ Saturday Night Fever 1977

**Luisa Fernandez**
★ Disco Darling 1978.

**Abba**
★ The Name of the Game 1978
★ Abba 1975
★ The very best of Abba 1974
★ The very best of Abba 1973

**Tina Charles**
★ Dance Little Lady 1976
★ I Love to Love 1976

## மக்கள் கருத்து

### இது அவருக்குத் தெரியாததல்ல!

6-2-79 'ஈழநாடு' இதழில் பெற்ருேர் என்ற போர்வையில் கடன்சபைத் தேர்தல் பற்றிய கடிதம் எழுதியவர் கடன்சபை முகாமைக் குழு உறுப்பினர் [ஆசிரியராகவல்ல—பெற்ருேர் என்ற முறையிலுமல்ல]

வேண்டுமென்றே இவர் ஆசிரியசமூகத்தை நையாண்டி பண்ணியிருக்கிருர்.

இலங்கை ஆசிரியர் சங்கம் இலங்கை பூராவும் இத்தேர்தலில் ஈடுபடவில்லையென்பது [பாவம்!] இவருக்குத் தெரியவில்லை

கடன் வழங்குசபை நாம் கேட்டுவாங்கியதல்ல. இது கட்டாயத் திணிப்பு. சம்பளத்தில் எம் சம்மதமின்றியே கழிப்பு. இதை வேண்டாமென்பவர்கள் வாக்களிக்கவில்லை இதில் ஆச்சரியமில்லையே!

பதவிஆசை கொண்டவர்கள் ஆள்மாருட்டம் முதலிய முறையற்ற செயல்களில் ஈடுபடலாம் என்ற அச்சத்தால் வாக்குச்சீட்டைப் பழுதடையச் செய்த ஆசிரியர்களும் உண்டு

படித்த வர்க்கம்— மாமம்-பெற்ருேர் - ஆச்சரியம் - தங்கள் படிப்புக்கு ஏற்றவாறு நடந்துகொண்டார்கள் என்பதை உணரமுடியாத பெற்ருேர் இவர். இதைவிட விந்தை உலகில் வேறிருக்க முடியாது

இ. மகாதேவா
இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.

''கைலாசநாதக்குருக்கள்

# சிங்களமதத்தலைவர்-மக்கள்

## மத்தியிலும் பிரபல்யமானவர்''

### அரசாங்க அதிபர் புகழாஞ்சலி

[புங்குடுதீவு]

''சிவஸ்ரீ கைலாசநாதக் குருக்கள் சிங்கள மதத் தலைவர்கள், பொதுமக்கள் மத்தியிலும் பிரபல்யம் பெற்று திகழ்ந்தார். தென்னிலங்கையில் உள்ள சைவாலயங்களுக்கு அவர் செய்த சேவை அளப்பரியது.''

இவ்வாறு யாழ். அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்ணுண்டோ அமரரான ஐ கைலாசநாதக்குருக்களின் இறுதிச் சடங்கு நிகழ்ச்சியில் பேசுகையில் கூறினுர்.

வழக்கறிஞர் திரு. பி. கதிரவேலு தலைமை வகித்தார்.

பண்டிதர் கா. பொ. இரத்தினம் எம் பி. பேசுகையில் கூறியதாவது:

சிவஸ்ரீ ஐ கைலாசநாதக் குருக்கள் இறைவனடி சேர்ந்தமை இந்துசமயத்துறைக்கு ஈடு செய்யமுடியாத இழப்பாகும். இலங்கையில் மட்டுமல்லாது இந்தியா, மலேஷியா, சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கும் சென்று கும்பாபிஷேகங்கள் செய்தும் பூசைக்கிரியைகள் செய்தும் சைவசமய வளர்ச்சிக்கு பெருந்தொண்டாற்றிய பெரியார் காலமானது தமிழ் உலகை திகைக்க வைத்துள்ளது'' என்ருர்.

நயினை சு. பரமேஸ்வரக்குருக்கள் உரை நிகழ்த்தும்போது "பிராமணகுலதிலகமாயும்எங்களுக்கு வழிகாட்டியாயும் ஆசிரியராகவும் வாழ்ந்த பெருமகனை இழந்து தவிக்கிருேம்'' என்ருர்.

நயினை செ. விசாகப்பெருமாள் பேசும்போது ''நாகபூஷணி அம்பாளுக்கும் புங்குடுதீவுக் கிராஞ்சிக் கந்தசுவாமிக்கும் அர்ச்சனை பூசை செய்யும் பிரதம சிவாச்சாரியாராய் விளங்கிய குருக்கள் அவர்கள் சைவசமய அன்பர்களுக்கு சிவநெறிமுறைகளை போதிக்கும் போதகராகவும் புகழ் பெற்றவர்'' என்ருர்.

பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் பேசும்போது வேத சிவாகம நுணுக்கங்களையும் சாஸ்திர உண்மைகளையும் தெளிவுறத் தெரிந்து கிரியைகளையும் பூசைகளையும் செய்த பெருமகனுரின் இழப்பு சிவநெறியாளர்களுக்கு பெருந்துன்பத்தைத் தந்துள்ளது'' என்ருர்.

புலவர் ஈழத்துச் சிவானந்தன் பேசும்போது ''சிவனடியார்களுக்கு சிவலிங்க மகத்துவத்தை தெரியவைத்த குருவாக விளங்கிய கைலாசநாதர் திருமுறைகளிலும் மெய்கண்ட சாஸ்திரங்களிலும், ஆழமான அறிவுடையவராக தமிழ் கூறும் நல்லுலகமெங்கும் பிரகாசித்தார்'' என்ருர். திருமதி வசந்தா வைத்தியநாதன் உரையாற்றும்போது குருக்கள் அவர்கள் சிவதத்துவத்தை விளங்க வைக்கும்போது மெய்தான் அரும்பி விதிர் விதித்து கண்ணீர் ததும்பி வெதும்பி சிவத்தோடு ஐக்கியமாகி விடுவார்'' என்ருர்.

புங்குடுதீவு இந்துவாலிபர் மன்றச் செயலாளர் சு. குணரெத்தினம் ''புங்குடுதீவில் முதன் முதலாக வேதாகம சாஸ்திர பாடசாலையை உருவாக்கி நடத்தியபோது குருக்கள் அவர்கள் அப்பாடசாலையின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவினுர்'' என்ருர்.

திருக்கேதீஸ்வரம் திருவாசக மடத்தலைவர் ஸ்ரீமத் சரவண முத்துச்சுவாமிகள் பேசும்போது ''கடந்த பதினைந்து ஆண்டுகளில் திருக்கேதீஸ்வரத் திருவாசக விழாவில் இடம் பெற்ற சிவபூசை மகாநாட்டுக்கு வருடந்தோறும் தலைமை தாங்கி சிறப்புற நடத்திய பெருமகனின் பிரிவு எங்களை வாட்டிக்கொண்டிருக்கிறது'' என்ருர்.

புங்குடுதீவு பசுபதிப்பிள்ளை படிப்பகத்தின் சார்பில் உரை நிகழ்த்திய ச. நகுலகுமார் குருக்கள் ஐயாவின் மறைவு புங்குடுதீவுக்கும் நயினுதீவுக்கு மட்டுமன்றி அகில உலகுக்கும் நஷ்டம் என்ருர்.

திருவாளர்கள் வித்துவான் சி ஆறுமுகம், சுப்பிரமணிய சாஸ்திரிகள் வித்துவான் பொன். அ கனகசபை, முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினர் வ நவரத்தினம், பண்டிதர் க கணபதிப்பிள்ளை, ஊர்காவற்றுறை நீதவான் திரு. ஜெகசோதி, வித்துவான் க. சபாரத்தினம், நா க சண்முகநாதபிள்ளை ஆகியோருட்பட பலர் உரைநிகழ்த்தினர் [உ]

## வாரம் ஒருமுறை சம்பளம்

### பாராளுமன்றத்தில் பிரேரணை

(கொழும்பு)

அரசாங்க ஊழியருக்கு வாரம் ஒருமுறை சம்பளம் வழங்க வேண்டுமென்ற பிரேரணை நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் நிறைவேறியது.

தனிப்பட்ட அங்கத்தவர் தினமான நேற்றுமுன்தினம் பேருவளை 2வது எம். பி திரு ஆர். ஜி சமரநாயக்கா இப்பிரேரணையை சபையில் சமர்ப்பித்தார்.

இப்பிரேரணையை சமர்ப்பித்த திரு சமரநாயக்கா அங்கு பேசுகையில் கூறியதாவது:

அபிவிருத்தி அடைந்தநாடுகளில் வாரம் ஒருமுறை சம்பளம் வழங்கப்படுகிறது. நமது நாட்டில் மாதம் ஒரு முறை சம்பளம் வழங்கப்படுவதால் ஊழியர்கள் பெரும் கஷ்டத்தை எதிர் நோக்க வேண்டியுள்ளது. மாதத்தில் ஒரு நாள் சம்பளத்தைப் பெறும் ஊழியர்கள் சம்பளப்பணம் செலவழிந்ததும் அடுத்த மாதம்வரை வட்டிக்குப் பணம் வாங்கிச் செலவிட வேண்டிய நிலை ஏற்படுகிறது. (ம-)

## கஜு வளர்ப்பு

[உடுப்பிட்டி]

வடமராட்சியில் 'கஜு' மரவளர்ப்பு மேற்கொள்ளப் பட்டுஉள்ளது. இதற்கு முன்னேடியாகத் தற்பொழுது புலோலி கமநலச் சேவை நிலையம், அம்பன் கமநலச் சேவை நிலையம் ஆகியவற்றில் விவசாயப் போதனுசிரியர்களால் 'கஜு' மரக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (உ)

### பகிஷ்கரிப்பு -- ஹர்த்தால்

## தமிழ்க் காங்கிரஸ் ஆதரவு:

### பாராளுமன்றத்தில் எதிரொலி

(கொழும்பு)

வடபகுதியில் நடைபெற்ற மாணவர் பகிஷ்கரிப்பு இயக்கத்தையும் ஹர்த்தாலையும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் ஆதரித்தது குறித்து பாராளுமன்றத்தில் நேற்றுக் கேள்வி எழுப்பப்பட்டது.

பாரளுமன்றத்தில் நேற்று ஒத்திவைப்பு நேரத்தின் போது ஹரிஸ்பத்துப எம். பி (ஸ்ரீ ல.சு. கட்சி) திரு. விஜயசிறி பேசுகையில்;

வடபகுதியில் நடைபெற்ற பகிஷ்கரிப்பையும், ஹர்த்தாலையும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆதரித்துள்ளதுடன், அறிக்கைகளையும் வெளியிட்டுள்ளது. தமிழ் காங்கிரஸின் உபதலைவர் திரு. எஸ் ஆர் கனகநாயகம் முன்னர் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில், செனட்சபை அங்கத்தவராக இருந்தவர். காங்கிரஸின் செயலாளர் திரு குமார் பொன்னம்பலம் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் செனற்சபையில் ஒரு அங்கத்தவர். இச் சபையில் திரு. கனகநாயகமும் இருக்கின்ருர். இவர்களது கட்சி அரசு எதிராகச் செயல்பட்டுள்ளது. இவர்கள் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை கல்வி அமைச்சர் அறிவிப்பாரா?'' என்று கேட்டார்.

அப்பொழுது சபையில் கல்வி அமைச்சரோ, பிரதி அமைச்சரோ இருக்கவில்லை. பாராளுமன்றவிவகார அமைச்சர் திரு. வின்சன்ட் பெரேரா இதற்குப் பதிலளிக்கையில், இவ்விஷயம் கல்வி அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வரும் என்ருர்.

## வகுப்புகள் நடக்கவில்லை;
## மாணவர் தர்மசங்கடம்

[யாழ்ப்பாணம்]

வடபகுதியில், சில பாடசாலைகளில் வைத்திய அத்தாட்சிப்பத்திரம் கொண்டு செல்லாத மாணவர்கள் வகுப்புகளுக்கு செல்லஅனுமதிக்கப் படவில்லை.

சிலபாடசாலைகளில் அதிபர்கள் வகுப்புக்குள் சென்று அமர்ந்துகொண்டனர்.

பெரும்பாலான பாடசாலைகளில் ஆசிரியர்கள் வகுப்புகளுக்கு செல்லவில்லை. எவ்வித பாடங்களும் போதிக்கவில்லை.

வசாவிளான் மத்திய கல்லூரி உரும்பராய் இந்துக் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி யாழ். சென்ஜேம்ஸ் கல்லூரி கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவர்கள் வைத்திய அத்தாட்சிப்பத்திரம் கொண்டு செல்லாததினுல் வீடுகளுக்கு சென்றனர். [க]

### வீதிசீர்கேடு

(உடுப்பிட்டி)

நெல்லியடியிலிருந்து விக்னேஸ்வராக்கல்லூரி ஊடாக கிராமக்குச் செல்லும் வீதி மிகவும் சீர்கேடான நிலையிலுள்ளதால் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை யேற்பட்டுள்ளது.



# கைதடி சமாதான நீதவான் ஆ. கந்தையா
# பாராட்டு விழாச் சிறப்பு மலர்

## தன்னலமற்ற ஒரு சிறந்த சமூகத் தொண்டன் கந்தையா

-- சோ. நிரஞ்சன் --

[சிரேஷ்ட வைத்திய அதிகாரி - யாழ் ஆஸ்பத்திரி]

கந்தையாவை பெயரளவில் 1976 தொடக்கத்தில் அறிந்தேன். அதுவும் அவரது கைப்பட எழுதிய கடிதம் மூலமாகவே. அக்கடிதம் கைதடியில் ஓர் அநாதைகளுக்கான இல்லம் அமைப்பதை அறிவிப்பதாகவும், அதற்கான ஆயத்த வேலைகள் செய்வதைப் பற்றியும் அதில் என்னையும் பங்கு பற்றும் படியும் எழுதியிருந்தார். அப்பொழுது நான் முல்லைத்தீவில் மாவட்ட வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிக்கொண்டிருந்தேன். பதில் கடிதத்தில் எனது கருத்தை எழுதியவுடன் "சுடச்சுட" கடிதம் கிடைத்தவுடனேயே — அடுத்த கடிதம் வரைந்திருந்தார். இப்படியாக நான் ஓர் அடியெடுத்து வைக்க யோசிக்க அவரது ஊக்கத்தால் இரண்டு அடியெடுத்து வைக்கக்கூடியதாகவிருந்தது இப்படியான அவரது அயராத முயற்சி இன்று கைதடியில் ஒரு நல்ல நோக்கத்திற்காக அமைந்த இல்லமாக மிளிர்கின்றது.

அவரை நேரடியாக திறப்பு விழாவிலே சந்தித்தேன். கடிதங்களினூடாக கண்ட கந்தையாவை நேரடியாக ஒரு கடமை வீரராக அன்று கண்டேன். கடமையில் கண்ணு கருத்தும், துடிப்பும், அன்பும் அவரிடத்தில் மிளிர்ந்தது. இந்த இல்ல வளர்ச்சிக்கு எந்தவிதமான ஆலோசனையைக் கூறினாலும் உடனே செயல்படுத்த முற்பட்டுவிடுவார். உதாரணமாக முல்லைத்தீவிலிருந்து ஓர் அன்பர் வேறு மதத்தவர், இப்படியான முயற்சிக்கு நல்ல ஆதரவு தருபவர் வர விரும்புவதாகக் கூறினேன் உடனடியாக அதற்கு ஒரு சிறந்த



ஏற்பாட்டைச் செய்து அந்த அன்பரைக் கௌரவித்தார். அதற்கு தக்க சன்மானமும் கிடைத்தது.

மேலும் கைதடியில் அமைந்திருக்கும் சைவச் சிறுவர் இல்லத்தை வழி நடத்தும் குழுவிற்கு ஒரு சிறந்த உந்து சக்தியாக விளங்கும் கந்தையாவின் கைவண்ணத்தை அவ்வில்லத்தைக் காணும்போது கட்டிடமளவில் — மாணவர்களது தொகை அவர்களது பண்பு முதலியவற்றைப் பார்க்கும்போது — நடைமுறையளவில் காணக்கூடியதாகவிருக்கின்றது.

கைதடி சைவச் சிறுவர்கள் இல்லத்துடன் பின்னிப் பிணைக்கப்பட்டிருக்கும் ஆ. கந்தையாவுக்கு அரசாங்கம் இரண்டு முக்கிய பதவிகளை வழங்கியிருக்கின்றது என்பதைக் கேட்கும்போது ஒரு பக்கத்தில் மகிழ்ச்சியும் மறு பக்கத்தில் துக்கமும் ஏற்படுகின்றது. ஒரு சிறந்த சமூகத்தொண்டரைக் கௌரவித்துப் போற்றுதற்குரியது மகிழ்ச்சிக்குரியது. ஆனால் இப்படியான தொழில்கள் அவரது தற்போதைய சேவையை மட்டுப்படுத்திவிடுமோ என்பதுதான் துக்கம். ஆனால் சைவநெறியை வளர்க்க உறுதி பூண்டவருக்கு இந்தப் பதவிகள் பட்டங்கள் பதவிகள் மேலும் ஊக்கத்தையும் தேச உணர்வையும் அதிகரிக்கும் என நம்புகிறேன்.

### கோப்பாய் எம். பி. மகிழ்ச்சி

திரு. ஆறுமுகம் கந்தையா அவர்களைச் சமாதான நீதவானாகவும் திடீர்மரண விசாரணை அதிகாரியாகவும் அரசாங்கம் நியமித்தமையை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

சி. கதிரவேலுப்பிள்ளை,
பா. உ. கோப்பாய்

### 'பணி மேலும் வலுப்பெறும்'

அன்பர் கந்தையாவுக்கு சமாதான நீதிபதிப் பட்டமும், மரண விசாரணை அதிகாரிப் பதவியும் அரசாங்கம் அளித்திருப்பது அவரதுபணி மேலும் வலுப்பெற உதவியாக இருக்கும்

இவ்வாறு ஈழத்து சிவனடியார் திருக்கூட்ட சார்பில் திருக்கேதீஸ்வரம் மன்னார் சி. சரவணமுத்து விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

### 'சைவத் தொண்டு வளரவே உதவும்'

சமாதான நீதவானாக அன்பர் கந்தையாவுக்கு சாவகச்சேரி எம். பி யின் சிபார்சின் பேரில் கிடைத்துள்ள கௌரவம் அவரது சைவத்தொண்டை மேலும் வளர்க்கவே உதவும் என்று பன்னாலை தெல்லிப்பளை வே. சண்முகம் தமது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருக்கிறார்.

### உண்மைச் சேவைக்கு கிடைத்த கௌரவம்

'அன்பர் கந்தையாவுக்குக் கிடைத்துள்ளது உண்மையான சேவைக்குரிய கௌரவமாகும்' இலங்கை [கைத்தறி] பிடவை உற்பத்தி பிரமுகர் சிவதர்மச் செல்வர் சி. நவரத்தினம் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

விற்பனையில் இன்று முன்னணி வகிக்கும்
வெற்றிவேல முருகா கற்பூரத்தை
தினமும் பாவியுங்கள்.
(அதிபர் மா. இரத்தினம்)

சன் இன்டஸ்ரீஸ்

கைதடி.

எம்மிடம் எல்லாவித சாய்ப்புச் சாமான்கள்,
ஆயுள்வேத மருந்துச் சரக்குகள், விவசாய ரசாயனப்
பொருட்கள் சில்லறையாகவும், மொத்தமாகவும்
நிதான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

லீலாவதி ஸ்ரோர்ஸ்

உரிமையாளர்: க. தம்பிப்பிள்ளை
(சமாதான நீதவான்)

கைதடி.

அன்பர் கந்தையாவுக்குக் கைதடியூர் மக்கள்
இன்று எடுக்கும் விழா ஒரு சிறந்த தொண்டனுக்கு
எடுக்கும் விழா. வளர்க அவர்தம் தொண்டு.

வீ. எம். கே.
தங்கமாளிகை

★ தங்க, வைர வியாபாரம் ★
கண்டி வீதி, சாவகச்சேரி.
[போன்: 288]

### சைவமக்களின் தொண்டன்

"தொண்டர் நாடொறுந்
துதிசெய்வருள் செய்
கேதீச்சரமது தானே"

உயர்திரு. ஆறுமுகம் கந்தையா அவர்கள் சைவமக்களின் தொண்டர். அவரது தொண்டு அவரின் விடா முயற்சியிலும், அன்னாரின் விடாமுயற்சி அவரது முழுமூச்சுமாக இருக்க, அரசு அவரைக் கௌரவிப்பதில் நாமெல்லோரும் ஒருங்கு சேர்ந்து மகிழ்ச்சியடைவதில் வியப்பேதுமில்லை. தொட்டுக் கொண்டதைத் தொடர்ந்து முடிப்பதிலும் பண்பு பிறழாது செயலாற்றுவதிலும் நறுக்கும் நேர்மைக்கும் தயங்காது தலை வணங்குவதிலும் அவருக்கு நிகர் அவர் தானென்று ஆணித்தரமாகக் கூறுவதில் மிகையேதுமில்லை. திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச்சபையின் ஆயுள் உறுப்பினர்; சபையின் புனருத்தாரண முயற்சிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கும் சைவப் பெரியார்களில் முக்கியமான ஒருவராகத் திகழ்பவர். அன்னார் சாமாதான நீதவானாகவும், மரணவிசாரணை அதிகாரியாவும் நியமிக்கப்பட்டுக் கௌரவிக்கப்படுவதைச் சைவ உலகம் போற்றிப்புகழ அவர் பன்னெடுங்காலம் தொடர்ந்து பணி புரிய எல்லாம் வல்ல கௌரி சமேத திருக்கேதீச்சரநாதன் துணை புரிவாராக! அவரும் அவர் குடும்பத்தினரும் துன்பமேயின்றி இன்பமாக என்றென்றும் வாழ வாழ்த்துவோமாக!!

-- மு. ஆறுமுகம்

பன்னர் கச்சேரி உதவி அரசாங்க அதிபர்

கந்தையாவுக்கு எடுக்கும் விழா மக்கள் தன்னலமற்ற ஒரு சிறந்த சமூகத் தொண்டிற்கு எடுக்கும் விழா.
வாழ்க கந்தையா,
வளர்க அவர் தொண்டு.

### எதிர்க்கட்சித் தலைவர் பாராட்டு

திரு. ஆறுமுகம் கந்தையா அவர்களின் சலியா உழைப்புக்கு என் மனம் நிறைந்த பாராட்டுக்கள். இவரின் முயற்சியினால் பல காலமாக இருந்துவந்த ஒரு பெருங்குறை தீர்க்கப்பட்டிருக்கிறது.

திரு. அ அமிர்தலிங்கம்
பா. உ.
எதிர்க்கட்சி முதல்வர்

"புதிய பதவிகளையும் பொறுப்புகளையும் பொறுப்பேற்கும் திரு. ஆ. கந்தையாவுக்கு எமது இரட்சணிய சேனையின் சார்பில் நல்வாழ்த்துக்கள். அவருக்கு உடல்நலம் மற்றும் ஞானம், அறிவு ஆகிய சகலவற்றையும் ஆண்டவன் கொடுத்து வழிநடத்த வேண்டுகிறேன்"

இவ்வாறு மாவட்ட இரட்சணியசேனை அதிகாரி கட்டன் எஸ் என். அரியரத்தினம் தமது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

### தொழில் அதிபர்கள் பாராட்டு

திரு ஆறுமுகம் கந்தையா அவர்கள் அல்லும் பகலும் கண்ணை இமைகாப்பதுபோலச் சைவச்சிறுர்களைக் காத்து வருகின்ற சிறப்பினை அரசாங்கமும் அறிந்து அவருக்குச் சமாதான நீதவான், மரணவிசாரணை அதிகாரி ஆகிய பெருமைகளை வழங்கிக் கௌரவிக்கும் வேளையில் நாம் இதயபூர்வமாக அவரை வாழ்த்தி அவர் பணி வெல்லுமாறு இறைவனை வழுத்துகின்றோம்.

சிவநெறிப் புரவலர்
திரு. க. கனகராசா J. P.
(மில்க்வைற் அதிபர்)

ஃ ஃ ஃ ஃ

அநாதர் தோழன் ஆறுமுகம் கந்தையா அவர்களுக்கு அரசாங்கம் வழங்கிய பதவியும், கௌரவமும் தொண்டுக்கும் சமாதானத்திற்கும் கிடைத்தவையாகும். திரு. கந்தையாவின் அன்புள்ளம் வாழ்க. அவர் தம் தொண்டு வளர்க.

இ. அரசரத்தினம்,
அரஸ்கோ ஸ்தாபனங்கள் அதிபர்

இந்தியா, சிங்கப்பூர் சேலைகளுக்கு நிகரான வகையில்
"நவரத்தினம்" சேலை பிரின்டுகள் தரமானவை.
இன்றைய நாகரீகத்திற்கேற்ப புதிய கண்கவர்
டிசைன்கள், கலர்கள்.

இன்றே வருகை தாருங்கள்

தரமான கைத்தறி சேலைகள், படுக்கை
விரிப்புகள், எமது தறிகளில் இந்திய
உற்பத்திக்கு நிகராக தயாரிக்கப்படுபவை.

கைத்தறி மாளிகை

டச்சு வீதி, சாவகச்சேரி

தொண்டர் கந்தையா பல்லாண்டு வாழ்க!

ஐங்கரன் ஸ்ரோர்ஸ்,

280, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

# "கல்விஅமைச்சின் கெடுபிடியை தமிழ்ச்சமுதாயம் எதிர்க்கவேண்டும்"

## யாழ். பெற்றோர் சங்கம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

பெப்ரவரி மாதம் 1-ம் திகதி முதல் 7-ம் திகதிவரை பாடசாலைகளுக்குப் போகாத மாணவர்களை அரசாங்க வைத்தியர்களின் வைத்திய சான்றுப் பத்திரமின்றி பாடசாலைகளில் அனுமதிக்கக்கூடாதென கல்வி அமைச்சு உத்தரவு விட்டிருக்கிறது என்று இலங்கை வானொலிச் செய்தி கூறியுள்ளது. மேலும் குறித்த நாட்களில் பாடசாலை சென்ற மாணவர்களே பரீட்சைகளுக்கு அனுமதிக்கப்படுவர்; போகாதவர்களை விடமுடியாதெனவும் அதே செய்தியில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. கல்வி அமைச்சு விடுத்த இவ்வறிக்கை தமிழ் சமுதாயம் முழுவதுக்குமே ஒரு பெரும் சவாலாக அமைந்துள்ளது. இந்த அடக்குமுறையை தமிழ்ப்பெற்றோர் ஏற்கமுடியாதென்பதை யாழ். பெற்றோர் சங்கம் சுட்டிக்காட்டுகிறது. தமிழ்ப் பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு வைத்தியசான்றுப் பத்திரத்தைப் பெற்றுக்கொடுக்கமாட்டார்கள். அப்படிப்பெற்றால் அவை பொய்ச்சான்றுகளாகும். பொய்யான வாழ்க்கைப் பாதையில் மாணவர்களை அரசாங்கம் நெறிப்படுத்தக்கூடாது."

இவ்வாறு யாழ். பெற்றோர் சங்கச் செயலாளர் சட்டத்தரணி இ. பொன்னையா விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார். அறிக்கை மேலும் கூறுவதாவது:-

குறித்த திகதிகளில் பாடசாலை சென்ற மாணவர்கள் மாத்திரமே அரசாங்கப்பரீட்சைக்கு விடப்படுவார்கள் என்று கல்வி அமைச்சு கூறுகிறது. இம்மாணவர்களின் பெறறோர் இப்பாகுபாட்டின் காரணமாக அவர்களை அப்பரீட்சைகளுக்குப் போகவிடமாட்டார்கள் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். கல்வித்துறையில் அரசு பின்பற்றும்தரப்படுத்தல்முறையை இலவிகிதாசார தெரிவை, தமிழ்ச் சமுதாயம் வன்மையாக எதிர்க்கிறது. எமது பிள்ளைகள் இம்முறைகளினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். நாம் நியாயத்தையும் நீதியையும் எடுத்துக்காட்டியும் அரசு அவற்றையெல்லாம் அலட்சியம் பண்ணியுள்ளது. எமது ஆட்சேபத்தைக் காட்டுவதற்கு அகிம்செயான ஆர்ப்பாட்டமொன்றேயுள்ளது. சனநாயகஉலகமேஏற்றுக் கொண்ட ஒரு முறை இது.

"அரசாங்கத்தின் இந்த அநாகரிகமான, சனநாயகத்துக்கு முரணான கெடுபிடியை உலகமே அறியட்டும். இவ்வாறு அடக்கும் அரசாங்கம் 7-2-79ல் நடந்த ஹர்த்தாலில் மூடப்பட்டிருந்த எல்லாக் கடைகளும் இனிமேல் திறக்கக் கூடாது என்று நாளை சொல்லக் கூடும். இந்த அரசின் அடக்குமுறை எமது சுதந்திர இயக்கத்தை முறியடிக்கும் தந்திரமாக அமைத்துள்ளது. இதனால் அரசாங்கம் இன ஒற்றுமையைச் சிதைத்துக் கொண்டே போகிறது. இந்தக் கெடுபிடியை கல்வியமைச்சு உடனே கைவிடுமாறு பெற்றோர்சங்கம் கூறுகிறது.

அரசாங்கம்கல்வித்துறையை தமிழ் மக்களின் பொறுப்பில் விடவேண்டிவந்தால் எமது பாடசாலைகளை நாமேநடத்தத் தயாராயுள்ளோம். இவ்விவகாரத்தில் பெற்றோர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், தமிழ்ச்சங்கங்கள், தமிழ் சமுதாயம் முழுவதுமே ஒன்றுகூடி ஒற்றுமைப்பட்டு ஒருமுக எதிர்ப்பைக்காட்டுவதுஅவசியமென யாழ். பெற்றோர் சங்கம் யோசனை கூறுகிறது.

## இந்திய வானொலி செய்தியிலும்...

[யாழ்ப்பாணம்]

"இலங்கையில் தமிழ் இளைஞர் பேரவையின் கோரிக்கையின் பேரில் தமிழர்கள் அதிகம் வாழும் யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

"கடைகள், ஹோட்டல்கள் மூடப்பட்டிருந்தன. குழந்தைகள் வகுப்புகளுக்குச் செல்லவில்லை. பல்கலைக்கழகங்களில் மாணவர்களைச் சேர்க்கும் புதியமுறைக்கு எதிராகவே ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது."

நேற்று முன்தினம் தமிழ்ப் பகுதிகளில் அனுஷ்டிக்கப்பட்ட ஹர்த்தால் குறித்து இந்திய வானொலியில் நேற்றுக் காலை ஒலிபரப்பான செய்தியே இது வாகும். [இ]

## கைதடியில் இன்று நடக்கும் விழா

[யாழ்ப்பாணம்]

கைதடி தொழில் அதிபர் கருணைப்புரவலர் ஆறுமுகம் கந்தையா சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டதை அடுத்து அவருக்குப் பாராட்டு விழா நடாத்த கைதடி மக்கள் முன்வந்துள்ளார்கள். கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் இப் பாராட்டுவிழா இன்று நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இன்று மாலை ஐந்து மணிக்கு நடைபெறும் இப் பாராட்டு விழாவில் சிறப்பு விருந்தினராக, தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரமும், சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. க. முருகவேள் ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

திரு. க. தம்பிப்பிள்ளை ஜே. பீ. தலைமையில் நடைபெறும் பாராட்டு விழாவில் சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினர் திரு. வ. ந. நவரத்தினம், திரு. வ. சரவணமுத்து ஆகியோரும் ஆசியுரை நிகழ்த்துவார்கள். பருத்தித்துறை நீதவான் திரு. க. ஞானச்சந்திரன் பாராட்டுப் பத்திரங்களை வழங்க. சிவதர்மச் செல்வர் சி. நவரத்தினம் பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பார்.

விழா ஆரம்பத்தில் கைதடிச் சந்தியிலிருந்து மங்கள இசையுடன் திரு. கந்தையா ஊர்வலமாக விழா மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்படுவார். கலைநிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெறும். [அ]

## புதிய கட்டடம்

[யாழ்ப்பாணம்]

வீமன்காமம் இளைஞர் சங்க சனசமூக நிலையத்திற்கெனப் புதிதாகக் கட்டடம் அமைப்பதற்கென 11,000 ரூபா செலவில் ஐந்து பரப்புக் வாங்கப் பட்டுள்ளது [புலோலி நி]

## தீக்கிரை

[உடுப்பிட்டி]

புலோலி கமநலச்சேவைநிலையத்தின் உடுப்பிட்டியிலுள்ள கிளைநிலையம் தீக்கிரையானது இத்தீ விபத்தில் சுமார் 15000 ரூபா பெறுமதியான உர வகைகளும் விவசாய இரசாயன மருந்து வகைகளும் தீக்கிரையாகிவிட்டன.

நள்ளிரவில் ஏற்பட்ட இத் தீவிபத்துப்பற்றி வல்வெட்டித்துறைப் பொலிஸார் தீவிர புலன்விசாரணை செய்து வருகின்றனர். இதுவரையும் எவரும் கைது செய்யப்படவில்லை.

## கொடும்பாவி எரிப்பு

[உரும்பராய்]

கல்வி அமைச்சர் திரு. நிசங்கா விஜயரத்னவின் கொடும்பாவி நேற்று பிற்பகல் உரும்பராயில் ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டு, சந்தியில் எரிக்கப்பட்டது.

சிவகுமாரன் சிலை அருகே இக்கொடும்பாவி எரிக்கப்பட்ட சமயம், மாணவர்கள் வெடி கொளுத்தி ஆர்ப்பாட்டம் செய்தனர். தரப்படுத்தலுக்கு எதிரான சுலோக அட்டைகளும் தொங்கவிடப்பட்டிருந்தன. [க]

## உறுப்பினராக தெரிவு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபை வெற்றிடத்திற்குப் பொதுமக்கள் பிரதிநிதிகளிலிருந்து ஆனைப்பந்திக் கிளைத் தலைவரும், இளைஞருமான திரு. ஏ. எஸ். தியாகராஜா போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார்.

சங்கத் தலைவர் திரு. மு. ஆலாலசுந்தரம் தலைமையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற விசேஷ பொதுக் கூட்டத்தில் பலரின் வேண்டுகோளுக்கிணங்க இயக்குநர்சபை உறுப்பினர் தேர்வுக்குப் போட்டியிட முன்வந்த திரு. ஆ. துரைராஜசிங்கம் போட்டியிலிருந்து வாபஸ் பெற்றதையடுத்துத் தெரிவு ஏகமனதாக நடைபெற்றது.

சிறந்த சமய, சமூகத் தொண்டனும் கூட்டுறவுத் துறை வளர்ச்சியில் மிகுந்த ஈடுபாடும், அக்கறையுமுள்ள திரு. ஏ எஸ். தியாகராசா வடபிரதேச போக்குவரத்துச் சபை தலைமைக்காரியாலய ஊழியராவார். (அ)


Rio (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
BLACK ZOO
From 13-2-79
HIGH VELOCITY

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-29, 9-30
சனி, ஞாயிறு 2-30
ராம்தாஸ்
ஏமாளிகள்

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
எம். ஜி. ஆர் - பத்மினி
விக்கிரமாதித்தன்

REGAL Daily at, 4-30, 7-00 & 9-30 p.m.
(Jaffna)
REVENGE
(Color)

5-வது வெற்றி வாரம்
தினசரி 4 காட்சிகள்
[illegible]
(யாழ்நகர்)
விஜயகுமார், ஜெயசித்திரா. நாகேஷ், சுந்தரராஜன் நடித்த
பயணம்

மகத்தான 2-வது மாதம்
ஸ்ரீதர் (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் - சுஜாதா நடித்த
உயர்ந்தவர்கள்

மனோகரா (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சாவித்திரி
பூஜைக்கு வந்த மலர்
(புதியபிரதி)
13-2-79 முதல் ராஜபார்ட் ரங்கதுரை

8-வது வாரம்
வின்ஸர் (யாழ்ப்பாணம்)
போன்: 466
தினசரி 5 காட்சிகள்
10-00, 1-00, 3-45, 6-45, 9-45
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

SHANTHI-Jaffna- Phone-7642
Daily 10-30, 2-30, 4-45, 7-00, & 9-30
RAN OVER 200 DAYS IN COLOMBO
MICHAEL YORK AND HIDEMI ACKI
SEVEN NIGHTS IN JAPAN
(Eastman Color)
செவன் நைற்ஸ் இன் ஜப்பான்
(More Suitable for Adults)
கொழும்பில் வெள்ளிவிழாக் கொண்டாடிய வண்ணக்காவியம்
Advance Bookings for Balcony Accepted

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி — தேவிகா
நீலவானம்

லிடோ போன்: [illegible] தினசரி [illegible] காட்சிகள்
விஜயகுமார் - ஸ்ரீவித்யா - தங்கவேலு
(யாழ்நகர்) ஆசை அறுபதுநாள்

ராணி (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
தமிழ் நாட்டின் சிறந்த நடிகை
லக்ஷ்மி - ஸ்ரீகாந்த் - தேங்காய் சீனிவாசன்
மற்றும் பலர் நடித்த சிறந்தபடம்.
ஜெயகாந்தனின்
ஒருநடிகை நாடகம் பார்க்கிறாள்
இயக்குநர்: A. பீம்சிங்

# எம். ஜி. ஆருக்கு சினிமா ஈடுபாடு நீங்கவில்லையாம்

## சென்னையில் அவரே வெளியிட்ட தகவல்

சென்னை, பெப். 9 தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனுக்கு சினிமாத்துறையில் உள்ள ஈடுபாடு இன்னமும் முற்றாக நீங்கிவிடவில்லையாம். இதனை அவரே சென்னையில் நேற்று நடைபெற்ற குழந்தைகள் திரைப்பட விழாவில் உரையாற்றுகையில் வெளியிட்டார்.

மேற்படி விழாவை ஆரம்பித்துவைத்துப் பேசிய அவர், குழந்தைகளுக்கு நன்மை பயக்கக்கூடிய ஒரு திரைப்படத்தைத் தயாரிக்கவேண்டும் அல்லது டைரக்ட்செய்ய வேண்டுமென்ற ஆர்வம் தமக்கு நிறைய உண்டு என்று ஒரு கட்டத்தில் குறிப்பிட்டார்.

முதலமைச்சராக உள்ள தான் பணம் வாங்காமலே நடிக்கப்போவதாகக் கடந்த ஆண்டு சிங்கப்பூரில் வைத்து திரு எம். ஜி ஆர். பேட்டி ஒன்றின்போது தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. [உ]

## இன்று திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

இராமலிங்க வீதி, நல்லூரில் புதிதாக நிறுவப்பட்ட கூத்தன் படிப்பகம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3-15க்கு பதில் நீதவான் திரு. இ. கனகரத்தினம் திறந்துவைப்பார்.

திறப்புவிழாவில் கோப்பாய் ஆசிரியர் கலலூரி விரிவுரையாளர் திரு. க. சொக்கலிங்கம், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் அருட்திரு. இ. ஜெயசீலன் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துவர். திரு. சு. திருச்செல்வம், திரு. தா. செல்வஞானம் ஆகியோரும் உரையாற்றுவார்கள்.

## இன்று

(யாழ்ப்பாணம்]

வண்ணை பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோவிலில் தைப்பூசத் திருவிழா இன்று நடைபெறுகிறது. பிற்பகல் 5 மணியிலிருந்து அபிஷேகம், பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டியின் சொற்பொழிவு, சுவாமி உள்வீதி வலம்வருதல் முதலியன இடம்பெறும். [அ]

0 0

(யாழ்ப்பாணம்]

மானிப்பாய் யாமாச்சந்தி கலைமகள் சனசமூகநிலையத்தில் இன்று காலை சமயதீட்சை வைபவமும், பாலர் பாடசாலை ஆரம்பவிழாவும் இடம்பெறும்.

நிலையத் தலைவர் திரு. ஞா. வேதீஸ்வரன் தலைமைவகிப்பார். தொழிலதிபர் திரு. வே. கனகராசா பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார். (உ

## சமாதியடைந்தார்

[யாழ்ப்பாணம்]

இணுவில் காரைக்கால் சுவாமிகள் சமாதியடைந்துவிட்டார்.

பொதுப்பணிகள் பல புரிந்த பெருந்தகையான இவரது பூதவுடல் இன்று காலை 10 மணிக்கு காரைக்கால் சிவன்கோவிலுக்கு அண்மையில் அடக்கம் செய்யப்படும்.

# தமிழக சட்டசபையில் எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு

சென்னை, பெப். 9 தமிழ்நாடு சட்டமன்ற கூட்டு அவையிலிருந்து ஆறு எதிர்க்கட்சிகள் தமிழக அரசின் போக்கை எதிர்த்து வெளிநடப்புச் செய்தன.

திராவிட முன்னேற்றக் கழகம், ஜனதாக் கட்சி, முஸ்லிம் லீக், இந்திய கம்யூனிஸ்ட். மார்க்ஸிய கம்யூனிஸ்ட், காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் ஆகிய கட்சிகளே வெளிநடப்புச் செய்தன.

தமிழக ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி சபையில் உரை நிகழ்த்துவதற்கு முன்னர் தமது கருத்துக்களைத் தெரிவித்து தனித்தனியே அறிக்கைகளை வெளியிட்ட பின்னரே இவர்கள் வெளிநடப்புச் செய்தனர். இவர்கள் வெளிநடப்புச் செய்தபோது கவர்னர் சபையிலிருந்து அவதானித்துக் கொண்டிருந்தார்.

எதிர்க்கட்சிகள் வெளியிட்டுள்ள அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

### தி. மு. க. கருத்து

இன்றைய தமிழக அரசின் நிர்வாகத்தில் சட்டம், ஒழுங்கு, அமைதி என்பன பெருமளவில் சீர்கெட்டுள்ளன என்று தி. மு. க. தெரிவித்துள்ளது.

### பொலிஸாரும் உடந்தை

தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் ஆட்சியில் சட்டமும் ஒழுங்கும் தவறிவிட்டது. திருமதி இந்திரா காந்தி சிறைக்கு அனுப்பப்பட்டபோது தமிழ் நாட்டில் இடம் பெற்ற கிளர்ச்சிகளுக்கு பொலிசாரும் உடந்தையாக இருந்தனர். இவ்வாறு ஜனதா கட்சி அறிவித்துள்ளது.

### பட்வாரி, எம். ஜி. ஆர். அபிப்பிராயம்

எதிர்க்கட்சியினரின் வெளிநடப்பு குறித்து தமிழக கவர்னர் திரு. பிரபுதாஸ்பட்வாரி முதல்வர் எம் ஜி ஆர் ஆகிய இவரும் கருதத்தெரிவிக்கையில் கூறியதாவது:

ஜனநாயக நாட்டில் எதிர்க்கட்சியினருக்கு வெளிநடப்புச் செய்ய உரிமையுண்டு எதிர்க்கட்சியினர் இன்று அமைதியாகவே இந்த வெளிநடப்பைச் செய்தனர். (இ)

## வைத்திய...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அரசினர் பாடசாலையிலும் மாணவர்கள் வகுப்புகளில் போய் இருந்துகொண்டனர். எந்த வகுப்பிலும் பாடபோதனை நடைபெறவில்லையாம்.

மாணவர்கள் வரவு, வழக்கமான இடாப்பில் பதியப்படவில்லை புறம்பான ஒரு கடுதாசியிலேயே கடந்த இரு தினங்களும் சிலபாடசாலைகளில் பதியப்பட்டன.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, டிறிபேர்க்கல்லூரி, மகளிர் கல்லூரி, வீரசிங்கம் மகாவித்தியாலயம், உசன் மகாவித்தியாலயம் ஆகியவற்றிலும் மாணவர்கள் வகுப்புகளில் போய் அமர்ந்துகொண்டனர். வரவுகள் இடாப்புகளில் பதியப்படவில்லை.

யாழ்ப்பாண நகரத்திலுள்ள சகல பாடசாலைகளிலும் நேற்று மாணவர்கள் நேராக தங்கள் வகுப்புகளுக்குச் சென்று அமர்ந்துகொண்டனர் ஆசிரியர்கள் வகுப்புகளுக்குச் சென்றபோதிலும், போதனை எதுவும் நடைபெறவில்லை. மாணவர் வரவும் இடாப்பில் பதியப்படவில்லை. சில பாடசாலைகளில் பாடபோதனை நடைபெற்றன.

இதேபோன்றுதான் வடபகுதியில் பெரும்பாலான பாடசாலைகளில் மாணவர்கள் நேராக வகுப்புகளுக்குச்சென்று அமர்ந்துகொண்டனர். கிராமப்புறங்களிலுள்ள பாடசாலைகள் சிலவற்றில்மட்டும் அதிபர் வைத்திய அத்தாட்சிப்பத்திரம் கொண்டுவராத மாணவர்களைத் திருப்பி அனுப்பினார்கள் என்று தெரிகிறது. (க)


## விற்பனைக்கு

VOLKSWAGAN BEETLE 1300 பதிவுசெய்யப்படாதது. நல்ல நிலைமையில் விற்பனைக்குண்டு. இன்று 9-00 முதல் 4-30 வரை கீழ்க்காணும் விலாசத்தில் பார்வையிடலாம் நீர் வளச் சபை (Water Resovrces Board) 601, நாவலர் ரோட், யாழ்ப்பாணம். 1587


## மரண அறிவித்தல்

### ச. சவரிமுத்து

கரம்பன் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் சவரிமுத்து காலமானார். இவர் சவரிமுத்து ஸ்ரோஸ் [யாழ்ப்பாணம்] உரிமையாளரும் மெக்டலினின் அன்புக் கணவரும், லீயோ அன்ரன் [உரிமையாளர் அன்ரன் சாறீஸ், யாழ்ப்பாணம்], அலோசியஸ் [உரிமையாளர், அல் கொன் பிறின்ரஸ், கொழும்பு], பிறேமா, கேமா [லண்டன்], ஐடா [லண்டன்], அலெக்சாண்டர் [மனெஜ்மன் எய்ட்ஸ்] ஆகியோரின் அன்புத் தந்தையும் லீமா, றட்னேஸ், பஸ்தியாம்பிள்ளை (Superintendent of Audit) அன்ரன் எட்வேட் [லண்டன்], ஸ்ரான்லி மனுவேல்பிள்ளை [லண்டன்] ஆகியோரின் மாமனாரும், பொன்னம்மாவின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற இன்னாசிமுத்துவின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் ஊர்காவற்றுறை சேமக்காலைக்கு சனிக்கிழமை 10-ம் திகதி மாலை 4 மணிக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம். 1579

# 'யாழ்.மாநகரசபை நிதிநிலை நன்றாயுள்ளது'

## ஊழியர் விருந்து வைபவத்தில் விசேஷ ஆணையாளர்

(கொக்குவில்)

"இன்று மாநகர சபையின் நிதிநிலைமை நன்றாயுள்ளது. அதனால் தான் கடந்த பல வருடங்களாகத் தற்காலிக ஊழியர்களாக இருந்தவர்களை நிரந்தர ஊழியர்களாக்க முடிந்தது. உண்மையாகவும் கடுமையாகவும் தேசநலன் கருதி உழைப்பவன் கட்டாயமாக முன்னுக்கு வரமுடியும்" என்று நீர்வேலைப்பகுதி மைதானத்தில் தமக்கு அளிக்கப்பட்ட தேநீர் விருந்து உபசாரத்தில் உரையாற்றுகையில் யாழ். மாநகரசபை விசேஷ ஆணையாளர் திரு. க. சிவஞானம் இவ்வாறு கூறினார்.

நீர்வேலைப்பகுதி மேற்பார்வையாளர் திரு. ஏ. குலநாயகம் தலைமையில் இவ் விருந்துபசாரவிழா நடைபெற்றது.

திரு. சிவஞானம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

'எனது கடினஉழைப்பாலும் விடாமுயற்சியாலுமே இச் சிறிய வயதில் படிப்படியாக முன்னேறி இவ்வுயர்பதவிக்கு வந்துள்ளேன். அது போல் வேலை செய்யும் ஒவ்வொரு ஊழியனும் உண்மையாகவும கடினமாகவும் உழைத்தால் முன்னுக்கு வரமுடியும் இங்கு பல வருடங்களாகச் சிற்றூழியராகக் கடமையாற்றிய திரு குலரெத்தினம் மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ளார் அவரிடம் தகுதியும் திறமையும் நேர்மையும் கடின உழைப்பும் இருந்ததைக் கண்டதனால்தான் அவர் இப்பதவிக்குத் தெரிவாகியுள்ளார் அதேபோல் தகுதி உள்ள சிற்றூழியர் யாவருக்கும் சந்தர்ப்பம் வரும் போது தகுதி அடிப்படையில் மேற்பதவி வழங்கப்படும்.

"கடந்த ஆண்டு நடைபெற்றசுதந்திரதினவிழாவன்று மாநகரசபை நீர்வேலைப்பகுதியினர் தங்களின் குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து வேலை நிறுத்தம் செய்தனர். இதனால் பொதுமக்கள் குடிநீரின்றி மிகவும் கஷ்டப்பட்டனர் இம்முறை சுதந்திரதினத்தில் குறைகள் தீர்க்கப்பட்டு விட்டன. அதனால் சுதந்திரதினத்தில் தேநீர்விருந்து கௌரவம் கிடைத்துள்ளது" என்றார்.

சந்தர்ப்பம் கிடைக்கும் போது ஏனைய தற்காலிக ஊழியர்களும் நிரந்தரமாக்கப்படுவர் என்றும் கூறினார்

திருவாளர்கள் தர்மலிங்கம் நடேசன் சிவஞானம் முத்துராசா ஆகியோரும் பேசினர்.

## இன்று ஜி. ஜி. யின் உருவப்படத்தை அமிர் திறப்பார்

(யாழ்ப்பாணம்)

அமரர் ஜி ஜி. பொன்னம்பலத்தின் நினைவு தினத்தையொட்டி அவரது உருவப்படம் ஒன்று யாழ்ப்பாணத்திலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைக்காரியாலயத்தில் இன்று திறந்துவைக்கப்படவுள்ளது.

இன்று காலை 9-30 மணிக்கு தமிழர் கூட்டணித்தலைவர் திரு. எம் சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறும இவ் வைபவத்தில் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயல அதிபருமான திரு. அ. அமிர்தலிங்கம் அமரர் ஜி ஜி யின் உருவப்படத்தை திரைநீக்கம் செய்துவைப்பார். [இ]

## கூட்டணியின்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தமிழ் ஈழம் காண்போம்; "பகவத்கீதையில் தேசிய இனவிடுதலைப் போராட்டம்" ஆகிய தலைப்புக்களில் கூட்டணிப் பிரமுகர்கள் உரையாற்றுவர். [கெ-இ]

## போக்குவரத்து...

(1-ம் பக்கத்தொடச்சி)

பிற்பகல் 2-30 மணிக்கு கோண்டாவிலிலுள்ள யாழ். இ. போ. ச. டிப்போவுக்கு விஜயஞ்செய்வார்.

3-30 மணிக்கு யாழ். புகையிரதநிலையத்திற்குச் செல்வார். பிற்பகல் 5-00 மணிக்கு காங்கேசன்துறை ரயில் நிலைய 'றன்னிங்செட்'டுக்கு விஜயஞ் செய்வார்.

இம்மாதம் 13ந் தேதி பிற்பகல் 3 மணிக்கு கொழும்பு திரும்புவார். (க)

## இ. போ. ச. இன்று மோதும்

[யாழ்ப்பாணம்]

அகில இலங்கை இ.போ.ச. உதைபந்தாட்டத் தெரிவுக் கோஷ்டி இன்று யாழ். நகரில் மோதுகின்றது. இ போ ச. கோஷ்டி இன்று குருநகர் பாடும்மீன் கழகத்துடனும், நாவை பாஷையூர் சென். அன்ரனிஸ் கழகத்துடனும் மோதும்.

இன்றைய போட்டிக்கு யாழ் மாவட்ட அரசாங்க அதிபரும், நாளைய போட்டிக்கு போக்குவரத்து அமைச்சர் ஜனாப் எம். எச். முகமட்டும் பிரதம அதிதிகளாகக் கலந்து கொள்ளுகின்றார்கள்.

[ஆனைக்கோட்டை]

ஆனைக்கோட்டை கரைப்பிரான் பிள்ளையார் பாலஸ்தாபன அபிடேக ஆராதனை, இம்மாதம் 12-ம் திகதி காலை பத்து மணியளவில் பிரதிஷ்டா சிரோமணி சா. வி. விஸ்வநாதக்குருக்களால் நடத்தி வைக்கப்படும்.


## பரதநாட்டிய நிகழ்ச்சி

இடம்: யாழ். வீரசிங்கம் மண்டபம்
நாள்: இன்று (10-2-79) சனிக்கிழமை
நேரம்: மாலை 6-00 மணி

செல்வி சியாமளாதேவி குமாரசாமி
(கொக்குவில் கலாபவன மாணவி)

ரிக்கற்: ரூபா 10, 5, 2 மட்டுமே. 1596


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 10-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the Geneial PostOffice The Eelanaa1u P B No: 49, Telegram: Belanaadu, Telephone: 889, Registered as a News paper in Sri Lanka.-